பட்டுள்ளது. உதவி கலெக்டரின் அறிக்கைக் கிடைக்கப்பெற்ற பின்பு தக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த சம்பவம் தொடர்பாக ஏரல் காவல் நிலையத்தைச் சேர்ந்த உதவி ஆய்வாளர் திரு. பி. ராஜேந்திரன், தலைமைக் காவலர் திரு. தங்கபாண்டியன்,முதல் நிலைக் காவலர் திரு. எஸ். வேல்சாமி, இரண்டாம் நிலைக் காவலர் திரு. சேகர், காவலர்கள் திரு. ஆர். அந்தோனி, திரு. அடைக்கல ஜேக்கப், திரு. எம். ஜப்பார் செல்வன், திரு. எம். செல்லையா ஆகியோர் 23-4-1993 தேதி முதல் தற்காலிக பணி நீக்கம் செய்யப் பட்டுள்ளனர். 23-4-1993 அன்று மாலை ஏரலில் உள்ள கடைகளைக் கடைக்காரர்கள் மூடி வைத்து இருந்தனர். பிரச்சினைகள் எழக்கூடும் என்று எதிர்பார்த்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 23-4-1993 அன்று திருச்செந்தூர்-திருநெல் வேலிக்கு இடையே பேருந்துகள் ஓட அனுமதிக்கப்படவில்லை. சட்டம் ஒழுங்கைப்பராமரிக்க முக்கியமான பகுதிகளில் போலீஸ் பாதுகாப்புப் போடப்பட்டு நிலைமைக் கண்காணிக்கப்பட்டு வருகிறது. தற்போது அங்கே அமைதி நிலவுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, இந்த விளக்கத்திற்குப் பிறகு அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இந்தப் பிரச்சினையைப் பற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதி இந்தப் பிரச்சினையை இத்தோடு முடித்து வைக்கிறேன்.

பிற்பகல் 12.40

4. கவன ஈர்ப்பு.

(அ) கரூர் வட்டம், நொய்யல் நீர்ப்பிடிப்புப் பகுதியில் சட்ட விரோதமாகக் கிணறுகள் தோண்டுவதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. ம. சின்னசாமி அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார் திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கரூர் வட்டம், நொய்யல் நீர்ப்பிடிப்புப் பகுதியில் சட்ட விரோதமாகக் கிணறுகள் தோண்டுவது குறித்த'' அவசரப்

1993 ஏப்ரல் 27] (திரு. ம. சின்னசாமி]

பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையில் வைக்கப் பட்டிருக்கிறது.

அறிக்கை.

கரூர் வட்டம், நொய்யல் அணை நீர்ப்பிடிப்பு பகுதியில் தனியார் சட்ட விரோதமாகக் கிணறுகள் தோண்டுவது தடுக்கப் பட்டு தற்பொழுது நீதிமன்றத்தின் நடவடிக்கையில் உள்ளது,

பொதுப்பணித்துறையைச் சார்ந்த நொய்யல் நீர்தேக்கத்தில் நீர்பரப்பு அருகே சர்வே எண். 369-ல் தனியாரால் கிணறு வெட்டியது தடுக்கப்பட்டுள்ளது. கரூர் சார்பு ஆட்சியர் தள ஆய்வு செய்து சம்பந்தப்பட்ட நபர்களிடம் மேற்கொண்டு கிணறு வெட்டக்கூடாது என வாக்குமூலம் பெற்றுள்ளார். இதற்கிடையில் கிணறு வெட்டியவர்கள் அரசு அதிகாரிகள் தாங்கள் கிணறு வெட்டுவதைத் தடுக்கக் கூடாது என கரூர் நீதிமன்றத்தில் (Divisional Court) தடை கேட்டு வழக்குத் தொடர்ந்துள்ளார்கள். (இவ்வழக்கு 666/92) இது தொடர்பாகப் புதிதாக கிணறு வெட்டிய நபர்கள் மீது கிரிமினல் வழக்கு இத்துறையின் விண்ணப்பத்தின்படி நெல்விலை காவல்துறை ஆய்வாளர் அவர்களால் வழக்குப் பதியப் பட்டு விசாரணையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ம. சின்னசாமி, நேரம் ஆகிவிட்டதால், ஒரு கேள்வி மட்டும் கேளுங்கள்.

திரு. ம. சின்னசாமி.: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நொய்யல் ஆற்றின் குறுக்கே 31 கோடி ரூபாய் செலவில் 2 அணைகளும், ஒரு தடுப்பு அணையும், ஆக 3 அணைகள் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் கட்ட அனுமதிக்கப்பட்டு, இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், அந்தத் திட்டம் முடிக்கப்பட்டு, காங்கேயத்தில் நடந்த அரசு விழாவில் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கரங்களாலே அந்தத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இந்த மூன்று அணைகளில், மூன்றாவதாக உள்ள ஆத்துப்பாளையம் அணையிலேயிருந்துதான் அரவக்குறிச்சி தொகுதியிலுள்ள பத்தாயிரம் ஏக்கரும், கரூர் தொகுதியிலேயுள்ள பத்தாயிரம்

[திரு. ம. சின்னசாமி.] [1993 ஏப்ரல் 27

ஏக்கரும் பாசனம் பெருகின்றன. இந்த ஆத்துப்பாளையம் அணையிலே இருக்கிற நீர்ப்பிடிப்புப் பகுதியில் 13 கிணறுகளைச் சட்டவிரோதமாக தனியார்கள் தோண்டி குழாய் போட்டு தண்ணீரை எடுத்துப் போகிற காரணத்தாலே அங்கீகரிக்கப்பட்ட ஆயக்கட்டு நிலங்களுடைய பாசனம் கெட்டு, அங்குள்ள விவசாயிகளுடைய மத்தியிலே ஒரு பதட்டநிலை ஏற்பட்டிருக்கிறது. அதைத் தடுக்க வேண்டும். அடுத்து, அந்தக்கிணறுவெட்டிகள் மீது கிரிமினல் வழக்குப் போடப்பட்டிருக்கிறது. அதற்கும் குற்றப் பத்திரிகைத் தாக்கல் செய்யப்பட வேண்டும். அடுத்து, நீதிமன்றத்திற்குச் சிலபேர் சென்றிருக்கிறார்கள். அந்த வழக்கு விரைவில் முடிக்கப்பட வேண்டும். மேலும், நீதிமன்றத்திற்குச் செல்லாமல் ஒரு கேவியட் மனுப்போட்டு அரசு தடுக்க வேண்டும். இந்தக் காரியங்களை உடனடியாக மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே எடுத்துச்சொல்லி தடுத்தாக வேண்டும். இல்லையென்றுச் சொன்னால், அங்கீகரிக்கப்பட்ட ஆயக்கட்டுதாரர்கள் பாதிப்புக்குள்ளாவார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைந்து நடவடிக்கை எடுத்து, அங்கீகரிக்கப்பட்ட பாசனதாரர்களுடைய உரிமையைப் பாதுகாப்பாரா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னென்ன நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்திருக்கிறது என்பதை அவர்களுடைய கேள்வியிலேயே தெரிவித்து இருக்கிறார்கள். அந்த நிலப்பரப்பிலே கிணறு தோண்டியவர்கள் மீது கிரிமினல் வழக்குப் பதிவு செய்யப்பட்டு இருக்கிறது. அவர்கள் டிவிஷனல் கோர்ட்டுக்குச் சென்று ஸ்டே வாங்குவதற்கு முயற்சிக்கிறார்கள். அதற்கான தடுப்பு நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுத்திருக்கிறது. ஆகவே, சம்பந்தப்பட்ட ஆயக்கட்டுகளைத் தவிர, வேறு தனிப்பட்ட முறையிலே தனியார்கள் யாரும் அனுமதியில்லாமல் செய்வதற்கு இந்த அரசு ஒரு காலத்திலும் அனுமதிக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, ஏற்கெனவே கிரிமினல் வழக்கு 666/92 என்ற அளவிலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. உடனடியாகக் குற்றப் பத்திரிகையும் தாக்கல் செய்வதற்கு காவல் துறையிடத்திலே நம்முடைய பொதுப்பணித் துறை அதிகாரிகள் கேட்டு இருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கைகளும், விசாரணையிலேயிருந்து, சாட்சியங்களோடு அதற்கான குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இதுபோன்ற சட்ட விரோத நடவடிக்கைகளில் அரசுக்கு விரோதமாக தனியார்

1993 ஏப்ரல் 27] [திரு. எஸ். கண்ணப்பன்]

யாராவது ஈடுபட்டால், கடுமையான நடவடிக்கை எடுக்கப் படும் என்பதை மாத்திரம் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) பேராவூரணித் தொகுதி மீனவர்களுக்கு அடையாள அட்டைகளும், அதைத் தவறவிட்டவர்களுக்குப் புதிய அட்டைகளும் வழங்க வேண்டிய அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவனஈர்ப்பு. திரு. ஆர். சிங்காரம் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பேராவூரணி தொகுதி மீனவர்களுக்குப் புதிய அடையாள அட்டைகளும், அதைத் தவறவிட்டவர்களுக்கு மீண்டும் நகல் அட்டைகளும் வழங்க வேண்டியது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்த விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவரால் 10-1-1992-ல் நடத்தப்பட்ட ஒருங்கிணைப்புக்கூட்டத்தில் மீனவர்களுக்கு வழங்கும் அடையாள அட்டையினை மாற்றியமைத்து, காவல்துறை துணை கண்காணிப்பாளர் கையொப்பம் பெற்று வழங்க வேண்டும் என்ற அறிவுரையின் பேரில் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்த பட்டுக்கோட்டை மற்றும் பேராவூரணி மாவட்டங்களிலுள்ள மீனவ கிராம மீனவர்களுக்கு இதுவரை 4,271 புதிய அடையாள அட்டைகள் மீன்துறை உதவி இயக்குநர் மற்றும் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் கையொப்பம் பெற்று வழங்கப்பட்டுள்ளன.

2. அடையாள அட்டைகள் காணாமல் போவதாலும், கடல் நீர் படுவதால் கரைப்பட்டுக் கெட்டுப் போவதினாலும் மாற்று அடையாள அட்டைகள் வழங்க வேண்டியுள்ளது.